10th February 1958]

MR. SPEAKER : அப்படியானால் கேட்கவேண்டாம். தயவு செய்து சேலத்தைப் பற்றி கேளுங்கள்.

SRI M. P. SUBRAMANIAM : சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்ட திட்டத்தின் விவரம் என்ன ? அதில், தனிப்பட்டவர் யார் ? எவ்வளவு தொகை கொடுக்க அவர் வாக்களித்திருக்கிறார்கள். அதில் அரசாங்கத்தின் பங்கீடு என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கரிமுத்து தியாகராஜன் அவர்கள் சேலத்தில் இந்த பாலிடெக்னிக் ஏற்படுத்த முன் வந்திருக்கிறார்கள். அப்படி தனிப்பட்டவர்கள் ஏற்படுத்துவதில் எந்த விதத்தில் அரசாங்க உதவி செய்வது என்பதைப் பற்றி ஒரு கொள்கையை அனுசரித்து வருகிறார்கள். மத்திய அரசாங்கத்தில் இருந்து பாதி கொடுக்கிறார்கள். பாக்கி பாதியில் பாதி சென்னை அரசாங்கமும், பாதி தனிப்பட்டவர்களும் போட்டு நடத்தவேண்டியது. வருஷா வருஷம் ஆகவேண்டிய செலவைப்பற்றி இப்பொழுது இருக்கக்கூடிய முறையில் தனிப்பட்டவர்கள்தான் பூராச் செலவையும் போட்டு வரவேண்டும். அதைப் பற்றி முடிவாக ஒரு கொள்கையும் வரையறுக்கப்படவில்லை.

SRI A. V. P. ASAITHAMBI : ஏற்கனவே இருக்கிற பாலிடெக்னிக் பள்ளிக்கூடம், திராவிட பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் என்று இருந்தது. இப்பொழுது அதை தமிழ் நாடு பாலிடெக்னிக் பள்ளிக்கூடம் என்று மாற்றியிருக்கிறார்கள். இதற்கு காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எல்லோரும் தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டுமென்று சொல்கிறார்களே, ஒரு பாலிடெக்னிக் பள்ளிக்கூடத்திற்காவது இருக்கட்டுமே என்று அப்பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

Madras Cultivating Tenants Protection Act

* 19 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether any landlords have been fined under the Madras Cultivating Tenants Protection (Amendment) Act, 1956, since the passing of the Act?

THE HON. SRI M. A. MANICKAVELU : If the member wants to know the number of landlords on whom a penalty was imposed for refusal to sign or for failure to lodge the lease deed in accordance with the provisions of section 4-B (1) of the Madras Cultivating Tenants Protection Act, 1955, the answer is ' nil '.

SRI N. K. PALANISAMI : மாகாணத்தின் பல பகுதிகளிலும் இம்மாதிரி பிரச்னைதான் இருக்கிறது. சட்டப்பிரகாரம் நோட்டீஸ் கொடுக்க வேண்டிய காலத்தில் எந்த மிராசுதாரும் கையெழுத்து போடுவதில்லை. ஆகவே, இம்மாகாணம் பூராவிலும் உடனடியாக, அப்படி கையெழுத்து போடச்செய்ய இந்தச் சட்டத்தை அதற்கு ஏற்றபடி இம்ப்ரூவ் செய்ய என்ன கஷ்டம் இருக்கிறது.

THE HON. SRI M. A. MANICKAVELU : என்ன இம்ப்ரூவ் பண்ணுவது என்று தெரியவில்லை. எல்லோரும் கையெழுத்து போட்டு கொடுக்கிறார்கள். மூன்று எடுத்து ஒன்றை தான் வைத்துக்கொண்டு, ஒன்றை விவசாயினிடமும், இன்னொன்றை தாசில்தார் ஆபீஸிலும் கொடுக்கிறார்கள். அங்கத்தினர் அவர்கள் வேறு எதாவது சொன்னால் அதைப் பற்றி கவனிக்கிறேன்.

[10th February 1958

SRI N. K. PALANISAMI : கையெழுத்து போடுவதில்லை என்ற பிரச்னைதான் மாகாணம் பூராவிலும் இருக்கிறது. ஆகவே ஒருசில மிராசு தார்கள் மீதாவது நடவடிக்கை எடுத்தால், அவர்கள் உடனடி கையெழுத்து போடுவார்கள். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : அப்படிச் செய்யவில்லை என்றால் 50 ரூபாய்வரையில் தண்டப்பணம் கொடுக்கவேண்டியதாய் வரும். அப்படி ஒரு புகாரும் இல்லை.

Cement factories

* 20 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tripartite Enquiry Committee constituted in 1954 has submitted its report regarding the wages, dearness allowance, leave facilities, bonus, working conditions, welfare measures for the workers employed in the cement factories in the State; and

(*b*) if so, the steps taken by the Government to implement its recommendations?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) A copy of the report has been forwarded to the Government of India for consideration by the Central Wages Standardization Board and the report of the Board is awaited. I may add in this connection that the recommendations of the Tripartite Enquiry Committee cannot be enforced as the Committee was not constituted under any statutory requirements.

9-30 a.m. SRI N. K. PALANISAMI : அதில் குறிப்பாக வீடு கட்டி கொடுப்பது இல்லாவிட்டால் அவர்களுடைய வீட்டுக்கு வாடகை கொடுப்பது போன்ற திட்டங்களை கொண்டு வருவதற்கு சர்க்கார் சிபார்சு செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : நான் ஆரம்பத்திலே சொன்னேன். முக்கூட்டு கமிட்டியின் முடிவு மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் மத்திய சர்க்காரின் அபிப்பிராயங்களை தெரிவிப்பது வரையில் நான் ஒன்றும் செய்வதற்கில்லை.

Backward Classes

* 21 *Q*.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation recently from the Sholia Vellala Community for its inclusion in the list of Backward Classes appended to the Madras Educational Rules; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) The Government have decided that there is no case for the inclusion of "Sholia Vellala" community in the list of Backward Classes.